


**14. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி ஃபிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுடன் இணைந்து பாரத் இன்னோவேட்ஸ் நிகழ்வை நீஸ் நகரில் இன்று தொடங்கிவைக்கிறார்.

2. டிஜிட்டல் சுகாதார முன்னெடுப்புகள் மூலம் தரமான சுகாதார சேவைகள் மக்களை சென்றடைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜே. பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. பள்ளி இடைநிற்றலை தவிர்ப்பதற்கான சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் கிழக்கு கடற்கரை பகுதிகளில் மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவடைகிறது.

5. பர்மிங்ஹாமில் ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

************

பிரதமர் - ஃபிரான்ஸ்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஃபிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரனுடன் இணைந்து பாரத் இன்னோவேட்ஸ் நிகழ்வை நீஸ் நகரில் இன்று தொடங்கிவைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் நம் நாட்டின் வேகமாக வளர்ந்துவரும் புத்தாக்க சூழல் அமைப்பை வெளிப்படுத்தும் வகையில் 120க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப்கள் உலகளாவிய முதலீட்டாளர்கள், தொழில்நுட்ப தலைவர்கள் மற்றும் தொழில்முனைவோர் பங்கேற்க உள்ளனர்.

தொடர்ந்து பிரதமர் இரு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பின் முன்னேற்றம் பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து திரு.இம்மானுவேலுடன் ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து திரு.நரேந்திரமோடி இரண்டு நாள் பயணமாக ஸ்லோவேக்கியா செல்கிறார்.

பின்னர் ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மீண்டும் ஃபிரான்ஸ் திரும்ப உள்ளார்.

இதனிடையே ஜி-7 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் திரு.நரேந்திரமோடியை அமெரிக்க அதிபர்

டொனால்டு ட்ரம்ப் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

************

பிரதமர் – சுகாதாரம்

நாட்டில் தரமான சுகாதார சேவைகள் அனைவரையும் சென்றடைவதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்ட செய்தியில் நலிந்த பிரிவினருக்கு உயர்தர மருத்துவ சேவைகளை வழங்கும் உலகின் மிகப்பெரிய சுகாதார திட்டமான ஆயுஷ் மான் பாரத் திட்டத்தை செயல்படுத்துவதில் நாடு பெருமிதம் கொள்வதாக கூறினார்.

முழங்கால் மாற்று சிகிச்சை, ஸ்டென்ட் உள்ளிட்டவை மலிவு விலையில் கிடைப்பதன் மூலம் ஏழை எளியோர் பயன்பெற்று வருவதாக கூறிய பிரதமர், கூடுதல் மருத்துவ கல்வி நிறுவனங்கள் மற்றும் இடங்கள் உருவாக்கப்பட்டதன் வாயிலாக மருத்துவக்கல்வி மாணாக்கருக்கு எளிதில் கிடைப்பதாக சுட்டிக்காட்டினார்.

************

நட்டா சுகாதாரம்

நாட்டின் சுகாதாரத்துறை முன் எப்போதும் இல்லாத வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளதாக மத்திய

சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் ஆரோக்கியமான குடிமக்களே வலுவான தேசத்தின் மிகப்பெரிய பலம் என்று கூறியுள்ளார்.

ஆயுஷ்மான் பாரத், இ-சஞ்சீவினி, U-Win உள்ளிட்ட டிஜிட்டல் சுகாதார முன்னெடுப்புகள் மூலம் தரமான சுகாதார வசதிகள் மக்களை சென்றடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், நாடுமுழுவதும் எயிம்ஸ் நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 23 ஆக அதிகரித்துள்ளதாக கூறினார்.

************

நிதின்கட்காரி

மத்திய அரசின் நல திட்டங்களால் நாட்டின் சுகாதார கட்டமைப்பு வலுப்பெற்றுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து துறை அமைச்சர் திரு. நிதின்கட்காரி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் இன்று வெளியிட்டுள்ள செய்தியில் "ஆரோக்கிய இந்தியா" என்ற தொலைநோக்கு பார்வையுடன் நாடுமுழுவதும் அனைத்து தரப்பு மக்களுக்கும் மலிவு விலையில் சுகாதார சேவைகள் கிடைக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு வசதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டம் தற்போது மூத்த குடிமக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மலிவு விலை மருந்தகங்கள் வாயிலாக மக்களின் மருத்துவ செலவுகள் குறைந்துள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர் ஈ-சஞ்சீவினி டிஜிட்டல் சுகாதார தளங்கள் மருத்துவ ஆலோசனைகளை வழங்கி வருவதாக எடுத்துரைத்தார்.

தூய்மை இந்தியா இயக்கம், தூய்மை மற்றும் சுகாதாரத்தை ஊக்குவித்து நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர் இத்தகைய முன்னெடுப்புகள் வாயிலாக அனைவரையும் உள்ளடக்கிய சுகாதார சூழல் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

************

பியூஷ்கோயல்

உலக அளவில் சுகாதார முன்னெடுப்புகளில் இந்தியா முன்னிலை வகிப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் மருத்துவ அவசர நிலை ஒருபோதும் நிதி நெருக்கடியாக மாறிவிடக்கூடாது என்பதில் அரசு உறுதியுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

************

உலக ரத்த தான தினம்

உலக ரத்த தான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வெளியிட்ட செய்தியில் மக்கள் தாமாக முன்வந்து ரத்த தானம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

ரத்த தானம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தி மக்களின் பங்களிப்பை அதிகரிக்க செய்வதே இந்நாளின் நோக்கம் என்றார்.

மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணை அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் வெளியிட்ட செய்தியில் தானமாக பெறப்படும் ஒவ்வொரு துளி ரத்தமும் தேவைப்படுவோருக்கு புதிய வாழ்வளிக்கும் என்று கூறியுள்ளார்.

"மனித நேயத்தின் ஒரு துளி, ரத்தம் கொடுங்கள் உயிர்களை காப்பாற்றுங்கள்" என்ற இந்தாண்டின் கருப்பொருளின் அடிப்படையில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை திருச்சி கி.ஆ.பெ. விஸ்வநாதன் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உதவி பேராசிரியர் டாக்டர் எழில்வாணன் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

ஷர்மா

தொழிலாளர் புள்ளி விவரங்கள் தொடர்பான உயர்மட்ட தொழில்நுட்ப நிபுணர் குழு தலைவராக பொருளாதார நிபுணர் பேராசிரியர் அலாக் என்.ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.ஷர்மா மனித மேம்பாட்டு நிறுவன இயக்குனராகவும், இந்திய தொழிலாளர் பொருளாதார சங்க தலைவராகவும் பணியாற்றியவர்.

தொழிலாளர் சந்தை குறியீடுகளை வலுப்படுத்துவது, தொடர் ஆய்வு மேற்கொள்வது, தொழிலாளர் சந்தையின் மாறிவரும் கட்டமைப்பை மதிப்பிடுவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்காக இந்த உயர் மட்ட தொழில்நுட்ப நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

************

ராஜ்மோகன்

அரசு பள்ளிகளில் மாணாக்கர் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளதாக மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாணாக்கருக்கு மனநல ஆலோசனைகள், தன்னம்பிக்கை

மற்றும் தன்முனை பயிற்சி வகுப்புகள் அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

பள்ளி இடைநிற்றலை தவிர்ப்பதற்காக மாணாக்கரின் வீடுகளுக்கு சென்று சமூக மற்றும் பொருளாதார காரணிகளை ஆய்வுசெய்ய சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் பத்தேகால் கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை அமைச்சர் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

************

லோகேஷ் தமிழ் செல்வன்

தமிழக அரசு தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகளை முனைப்புடன் மேற்கொண்டு வருவதாக மாநில வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர் திரு.லோகேஷ் தமிழ் செல்வன் கூறினார்.

நாமக்கல் மாவட்டத்தில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நல திட்ட உதவிகளை வழங்கிய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு அதிகாரிகள் லஞ்சம் பெறுவது குறித்த புகார்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆன்லைன் பத்திரப்பதிவுகள் 6 மாதங்களில் நடைமுறைக்கு வரும் என்று தெரிவித்த அமைச்சர்

மாநிலத்தில் வணிகவரித்துறை சிறப்பாக செயல்படுவதாக கூறினார்.

முன்னதாக ராசிபுரத்தில் 79 பயனாளிகளுக்கு ஒருகோடியே 9 லட்ச ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கிய அமைச்சர் 234 பேருக்கு குடும்ப அட்டைகளையும் வழங்கினார்.

************

மீன்பிடி தடைக்காலம்

தமிழகத்தின் கிழக்கு கடற்கரை பகுதிகளில் மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவடைகிறது.

நாகை மாவட்டத்தில் மீனவர்கள் 61 நாட்களுக்கு பின்னர் ஆழ்கடலுக்குள் மீன்பிடிக்க செல்வதற்கான முன்னேற்பாட்டு பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

ராணிப்பேட்டை

ராணிப்பேட்டை மாவட்டம் வானாம்பாடி ஏரியில் தனியார் தொழிற்சாலைகள் ரசாயன கழிவு நீரை வெளியேற்றினாலோ, விதிமீறலில் ஈடுபட்டாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப்ரியா எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

இருவரி

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 214 திருக்கோவில்களில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

தகுதியுடையோர் hrce.tn.gov.in என்ற இணையதளத்தில் அடுத்த மாதம் 22 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

தமிழக அரசின் சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் ஓராண்டு முதுநிலை இதழியல் பட்டயப்படிப்பில் சேர்வதற்கு வரும் 20ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்தல், புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகளை கட்டணமின்றி பெறுவதற்கு சின்னகாஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நல கூடத்தை அணுகலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் மலேரியாவை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு

வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் சீர்காழி குத்தாலம் மயிலாடுதுறை ஆகிய ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் நாளை மறுநாள் முதல் பருத்தி ஏலம் தொடங்கப்பட உள்ளதை அடுத்து பருத்தி விவசாயிகள் தங்களது பருத்தியை தரம் பிரித்து மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டத்தின் கீழ் விற்பனை செய்துகொள்ளலாம் என ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் தேசிய டிஜிட்டல் திட்டத்தின் கீழ் தங்களது கால்நடைகள் குறித்த விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே 666 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப்பட்டு 4 பேரை ஆணைக்காரன் சத்திரம் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

************

வானிலை

தஞ்சை திருவாரூர் நாகை மயிலாடுதுறை புதுக்கோட்டை சென்னை செங்கல்பட்டு காஞ்சிபுரம் கடலூர் விழுப்புரம் திருவண்ணாமலை பெரம்பலூர் அரியலூர்

கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

************

கிரிக்கெட்

பர்மிங்ஹாமில் ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இரவு 7 மணிக்கு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

************

கால்பந்து

FIFA உலக கோப்பை கால்பந்து போட்டியில் இன்று ஆஸ்திரேலியா - துருக்கியை 2-0 என்ற கணக்கில் வென்றது.

இன்று நடைபெற்ற பிற ஆட்டங்களில் ஸ்காட்லாந்து - ஹெயிட்டியை 1-0 என்ற கணக்கில் தோற்கடித்தது.

பிரேசில் – மொரோக்கா

கத்தார் - சுவிட்சர்லாந்து இடையேயான ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

ஜெர்மனி - Curacao-வை இன்று இரவு எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது